**அக்டோபர்: 11**

## மன்னிப்பு பலவீனம் அல்ல, வலிமை

**வாசிக்க: லூக்கா 23:34.**

ஹலோ செல்லங்களா நேற்றைய தினம் நம் ஆண்டவருடைய மரணத்தை தியானித்தோம் அல்லவா. ஆனால் அவர் மரணிப்பதற்கு முன்னால் சிலுவையிலே தொங்கிய சமயத்தில் அவர் ஏழு முறை பேசினார். ஒவ்வொரு முறை அவர் பேசிய வார்த்தைகளில் ஆயிரமாயிரம் பாடங்களை நாம் கற்கலாம். ஆகவே வருகிற ஏழுநாட்களுக்கு அந்த ஏழு வார்த்தைகளையே தியானிக்க போகிறோம். கெத்செமனே தோட்டத்தில் அவரை கைது செய்து இராமுழுவதும் அவரை இளைபாறவே விடாமல் பிரதான ஆசாரியனிடமும், பின்பு பிலாத்து விடணும், அங்கிருந்து ஏரோதுவிடம் அழைத்து சென்று கடைசியில் மறுபடியும் ரோம ஆளுநர் பிலாத்துவிடமே அழைத்து வந்து சிலுவையிலறைய தீர்மானித்தபின், அவரை கொடூரமாக அடித்து அவமானபடுத்தி சிலுவையில் தொங்கவிட்டனர். அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்.




நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம்முடைய அன்பை மனுகுலத்திற்கு இவ்விதமாக காண்பித்தார். அநேக நேரங்களில் நமக்கு எதிராக யாராவது செய்கிற சிறு சிறு காரியங்களை நம்மால் மறக்க முடிவதில்லை. நம் ஆண்டவரை பாருங்கள். அவரை பரிகாசம் செய்தனர், பொய்யாக குற்றம் சாட்டினர், கொடூரமாக சித்தரவதை செய்து, கேலிபரிகாசமாக்கி, சிலுவையில் வேதனையில் தொங்கும் போதே சவால் செய்தனர். அவர்களை பார்த்து ஜெபிக்கிறார்; "பிதாவே இவர்கள் தெரியாமல் இப்படி செய்கின்றனர்". இதை நாம் மனித கண்ணோட்டத்தில் பார்த்தால் இவர்களை மன்னிக்கவே முடியாது. ஆண்டவருடைய கண்களிலிருந்து பார்க்கலாமா? தாங்கள் தேவகுமாரனையே குற்றபடுத்தி நிறுத்துகிறோம் என தெரியாமல் செய்தனர். தங்களை இரட்சிக்க வந்த இரட்சகர் மேலேயே பொய் குற்றம் சாட்டுகிறோம் என அறியாமல் செய்தனர்.உலகபாவத்தை சுமந்து தீர்க்கும் ஆட்டுகுட்டியானவர் என புரியாமலேயே நம் ஆண்டவரை சிலுவையில் அறைந்து கொன்றனர்.
ஆகவே தான் அப்படி ஜெபித்தார். நாமும் நமக்கு மன்னிக்கிற சுபாவம் மட்டுமில்லாமல், மன்னிக்கிற இருதயத்தை தரும்படி ஜெபிக்கலாமா?

(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. கொலோசெயர் 1:14

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, மற்றவரை மன்னிக்கவும், நேசிக்கவும் இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

